யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | கிறிஸ்தவம் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து புள்ளடி இடுக.

புனித கிளமென்ட்" இன் கருத்துப்படி திருவிவிலியம் என்பது
1. பழமை வாய்ந்த நூலாகும் 2. புனித நூலாகும் 3. இலக்கிய நூலாகும்
4. கீழைத்தேச நூலாகும் 5. இறை நூலாகும்

பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்பட்டாலும் சில பகுதிகள் அரமேய மொழியில் எழுதப்பட்டதற்கான காரணம்
1. இஸ்ரயேல் மக்களின் தாய்மொழி அரமேய மொழியாகும்
2. இஸ்ரயேல் மக்களின் அரச மொழியாக அரமேய மொழி வழக்கிலிருந்தமையாகும்
3. விவிலிய நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் அரமேய மொழியின் செல்வாக்கு அதிகமானதாகும்
4. விவிலிய நூல்கள் அவர்கள் பேச்சு மொழியிலும் இருக்க வேண்டும் என்னும் கருத்திலாகும்
5. பபிலோனிய அடிமைத்தனத்தின் போது இஸ்ரயேல் மக்கள் எபிரேய மொழிக்கு சமமாக அரமேய மொழியைப் பயன்படுத்தியமையாகும்

சமாரியப் பகுதியில் அடங்கும் இடங்களாவன
1. எபிரோன், செக்கேம் 2. கெரிசிம் மலை, ஒலிவமலை 3. எபிரோன், தாபோர்மலை
4. செக்கேம், கெரிசிம் மலை 5. பெத்லகேம், ஒலிவமலை

இஸ்ரயேல் மக்களின் தலைவர்களும் குருக்களும் இவ் இறை ஏவுதலை உடையோராவர்
1. மேய்ப்பு இறை ஏவுதல் 2. வாய்மொழி இறை ஏவுதல் 3. எழுதும் இறை ஏவுதல்
4. செய்தியின் இறை ஏவுதல் 5. நம்பிக்கையின் இறை ஏவுதல்

இஸ்ரயேல் மக்கள் பபிலோனியாவில் அடிமைகளாக இருந்த காலம்
1. 40 வருடங்கள் 2. 400 வருடங்கள் 3. 200 வருடங்கள்
4. 70 வருடங்கள் 5. 30 வருடங்கள்

இஸ்ரயேல் வரலாற்றில் யோசுவாவின் பின் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ---------- உருவாகினர்.
1. நீதித்தலைவர்களாக 2. குருக்களாக 3. மக்கள் தலைவர்களாக
4. இறைவாக்கினராக 5. குலமுதுவர்களாக

திருவிவிலியம் அச்சிடப்படுமுன் நடைமுறையிலிருந்த மரபு முறையாவது
1. யாவே மரபு 2. எலோகிம் மரபு 3. இணைச்சட்ட மரபு
4. குருமரபு 5. வாய்மொழிமரபு

தந்தையிடமிருந்து மகனுக்கு ஆட்சி அதிகாரம் வழங்கப்படும் அரச பரம்பரை முறையை உருவாக்கியவர்
1. யாக்கோபு 2. தாவீது 3. சாமுவேல்
4. கிதியோன் 5. ஏலி

உடன்படிக்கை என்பதன் எபிரேயச் சொல்
1. பிப்லியோன் 2. மாசா 3. சாபத்து
4 செமையோன் 5. பெரித்



agaram.lk
Scanned with CamScanner

10. "பிடுங்கவும் தகர்க்கவும் அழிக்கவும்" என அழைப்புப் பெற்ற இறைவாக்கினர்
1. எசாயா 2. எரேமியா 3. எசெக்கியேல்
4. மீக்கா 5. ஆமோஸ்

11. "மண்ணால் மனிதனை உருவாக்கல்" எதனை அடையாளப்படுத்துகிறது.
1. பெறுமதியில் குறைந்தவன் என்பதை
2. மறைபொருளானவன் என்பதை
3. மனிதன் இறைவனல்ல என்பதை
4. நிலத்திற்கு மாத்திரமே தொடர்புடையவன் என்பதை
5. இறைவன் சர்வவல்லமையுள்ளவர் என்பதை

12. சமுதாயத்தில் நிலவிய அநீதிகளைப் பற்றி எடுத்துக் கூறிய இறைவாக்கினர்
1. எசாயா 2. ஆமோஸ் 3. எசெக்கியேல்
4. மீக்கா 5. எரேமியா

13. ஆபிரகாமின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்வது
1. இறைவனுக்காக நாம் எதையும் தியாகம் செய்ய வேண்டும் என்பது
2. முதிர்ந்த வயதில் இறைவன் எம் வேண்டுதலை நிறைவேற்றுவார் என்பது
3. மனிதனால் நிறைவேற்ற முடியாதென நினைக்கின்ற காரியங்கள் இறைவனால் நிறை வேற்றப்படும் என்பது
4. மற்றவர்களுக்காக உதவி செய்ய முன்வர வேண்டும் என்பது
5. காலத்தின் செயற்பாடுகளுக்கு இணங்க வேண்டும் என்பது

14. வடஅரசு அடிமையாகியது
1. அசீரியாவிற்கு 2. பபிலோனியாவிற்கு 3. கிரேக்கத்திற்கு
4. பாரசீகத்திற்கு 5. உரோமைக்கு

15. மேன்மையான இறைவனை ஆயனாகவும், இஸ்ரயேல் மக்களை அவரது மந்தைகளாகவும் எடுத்துக்காட்டிய இறைவாக்கினர்
1. எசாயா 2. ஒசேயா 3. நாத்தான்
4. ஆமோஸ் 5. எரேமியா

agaram.lk

16. கூற்று: பெயர்செபா இஸ்ரயேல் மக்களின் புனித இடமாக ஆரம்பமானது
காரணம் : ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை ஈசாக்கு மூலம் புதுப்பிக்கப்பட்டது
1. கூற்று சரி, காரணம் சரி
2. கூற்று பிழை, காரணம் பிழை
3. கூற்றுக்கும் காரணத்திற்கும் தொடர்பில்லை
4. கூற்று சரி, காரணம் பிழை
5. கூற்று பிழை, காரணம் சரி

17. பலஸ்தீனா வரியினைச் சுமத்த வேண்டியிருந்தது
1. எகிப்தியருக்கு 2. அசீரியருக்கு 3. உரோமையருக்கு
4. பபிலோனியருக்கு 5. கிரேக்கருக்கு

18. சிலுவையில் அறைவதற்கு தீர்ப்பிடும் அதிகாரம் இருந்தது
1. தலைமைக்குருக்களுக்கு மட்டும் 2. தலைமைச் சங்கத்திற்கு மட்டும்
3. கிரேக்கருக்கு மட்டும் 4. உரோமைப் பேரரசுக்கு மட்டும்
5. பரிசேயருக்கு மட்டும்

19. பலஸ்தீன மக்கள் மீது சுமத்தப்பட்ட இரண்டு வரிகள்
1. மேய்ப்பு வரி, நிலவரி 2. ஆலயவரி, அடிமைவரி
3. உரோமைப் பேரரசுக்கான வரி, ஆலய வரி 4. உரோமைய வரி, அடிமை வரி
5. அடிமைவரி, நிலவரி

20. A : இறைவனை மனித உருவில் முன்வைத்தல்
B : இயற்கையிலும் மனித வரலாற்றிலும் இறைவனைக் காணல்
மேலே குறிப்பிட்ட இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள கருத்தை வலியுறுத்தும் கூற்
1. வாய்மொழி மரபு 2. குருமரபு 3. எலோகிம் மரபு
4. யாவே மரபு 5. இணைச்சட்டமரபு

(20 புள்ளிகள்)

## பகுதி II

❖ பகுதி I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரு வினாக்களையும் தெரிந்தெடுத்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. i. இணைத்திருமுறை நூல்கள் நான்கைப் பெயரிடுக.
   ii. இறைவன் மனித உருவில் எடுத்துக் காட்டப்படுகின்றார் என்பதற்கு நான்கு உதாரணங்கள் தருக.
   iii. இறை ஏவுதல் என்னும் கருத்தை நான்கு காரணிகளில் தருக.
   iv. இஸ்ரயேல் மக்களின் சமூகப் பிரிவினர்கள் நால்வரைத் தருக.
   v. இறைவன் நீதித்தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பணிகள் நான்கைக் குறிப்பிடுக.

2. i. ஐந்நூலில் ஒரு சம்பவம் இரு முறை அல்லது பலமுறை ஒன்றுக்கொன்று வேறுபட்ட விதமாக காணப்படுவதை எடுத்துக்காட்ட உதாரணங்கள் நான்கு தருக.
   ii. குருமரபின் அமைப்பு முறைகள் நான்கு தருக.
   iii. மோசே பாரவோனிடத்தில் வளர்ந்தபோது பெற்ற அனுபவங்களுக்கு நான்கு எடுத்துக் காட்டுகள் தருக
   iv. பாலைவனத்தில் பசி ஏற்பட்டபோதும், அபாயங்கள் ஏற்பட்ட போதும் இஸ்ரயேல் மக்கள் பெற்ற இறைபராமரிப்புக்கள் இவ்விரண்டு வீதம் எழுதுக.
   v. பத்துக் கட்டளைகளுடன் தொடர்புடைய சட்டங்கள் நான்கு தருக.

3. i. இறைவாக்கினர்களுக்குரிய பண்புகள் நான்கு தருக.
   ii. மெசியாவின் சிறப்புப் பண்புகள் நான்கு தருக.
   iii. இறைவாக்கினர் அழைப்பின் பொதுவான பண்புகள் நான்கு தருக.
   iv. இஸ்ரயேலரின் அரசர்கள் நால்வரை எழுதுக.
   v. பாஸ்கா உணவு வழிபாட்டின் பிரதான அம்சங்கள் நான்கு தருக.

## பகுதி II

4. i. சீனாய் உடன்படிக்கையின் குறிக்கோள்களை விளக்குக.
   ii. இன்றைய சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப சீனாய் உடன்படிக்கையின் குறிக்கோள்கள் எவ்வளவு தூரம் உதவும் என்பதை 100 சொற்கள் அளவில் எழுதுக.
5. i. படைப்பு வரலாற்றை முதலிரு அதிகாரங்களின் அடிப்படையில் வேறுபடுத்தி விளக்குக.
   ii. முதல் பெற்றோரின் பாவம் சமூகத்தில் தொடர்ந்தது என்பதனை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
6. i. ஒசேயா இறைவாக்கினரின் உடன்படிக்கை வாழ்வு பற்றிய போதனைகளை விளக்குக.
   ii. இவ்விறைவாக்கினரின் போதனை இன்றைய சமூகத்திற்கு பொருந்துமாற்றினை விளக்குக.
7. i. பலஸ்தீனாவின் அரசியல் பின்னணியை விளக்குக.
   ii. அங்கு நிலவிய பொருளாதார நிலையை விளக்குக.



agaram.lk
Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | புள்ளித்திட்டம் | கிறிஸ்தவம் |
|---|---|---|

## பகுதி - I

1. (2)
2. (5)
3. (4)
4. (1)
5. (4)
6. (1)
7. (5)
8. (2)
9. (5)
10. (2)
11. (5)
12. (2)
13. (3)
14. (1)
15. (1)
16. (1)
17. (3)
18. (4)
19. (3)
20. (4)

## பகுதி II

### பகுதி I

1. i. தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாருக், மக்கபேயர் 1, மக்கபேயர் 11

ii. யாவே குயவனைப் போல்
விவசாயியைப் போல்
சத்திர சிகிச்சை நிபுணரைப் போல ஆதாமின் விலாவினை எடுத்தல்
தையற்காரன் போல்

iii. இறைவனின் மூச்சு, உயிர்ப்பாற்றல், செயற்படச் செய்தல், வழி காட்டுதல், பணியாற்றச் செய்தல், கண்ணுக்கு புலப்படாத சக்தி, வாழச் செய்தல், ஊக்குவித்தல்

iv. பரிசேயர், சதுசேயர், லேவியர், சமாரியர், எஸ்லேனியர், செலட் என்னும் தீவிரவாதக் குழு

v. அந்நியரின் படையெடுப்புக்களிலிருந்து மக்களை மீட்டெடுத்தல்
சமூகத்தில் நீதியை நிலைநாட்டல்
சமூகத்தின் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்த்தல்
அவர்களின் வாழ்நாளெல்லாம் இறைதிட்டத்தை நிறைவேற்றல்

2. i. படைப்புக்கதை, பத்துக்கட்டளை, வெள்ளப்பெருக்கு, வெள்ளப்பெருக்கின் காலம்

ii. இலக்கியப்பாணியில் அமைந்துள்ளது
மீண்டும் மீண்டும் கூறல் இடம் பெற்றுள்ளது
வழிபாடுகளில் ஈடுபாடு கொண்டு எழுதப்பட்டுள்ளது
தலைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எண்கணக்குகள் அதிகளவில் உபயோகிக்பட்டுள்ளன.

iii. அரச வாழ்க்கைக்குரிய அனுபவங்கள்
போர்க்கலை
ஆட்சித்துறை
கட்டிடத்தொழினுட்பம்
சட்டம்

iv. மன்னா பொழிதல், காடைகள் கொடுத்தல்
வெண்கலப்பாம்மை உயர்த்துதல், ஆக்கிரமிப்புக்களிலிருந்து பாதுகாப்பு

v. அடிமைகளின் சட்டம், வன்முறைச் செயல்கள் சட்டம், ஈடுதருதல் பற்றிய சட்டங்கள், ஒழுக்கநெறிகள் பற்றிய சட்டங்கள், நீதியும் இரக்கமும் பற்றிய சட்டங்கள்



agaram.lk
Scanned with CamScanner

3. i. நம்பிக்கை, கீழ்ப்படிவு, துணிவு, தாழ்மை, அர்ப்பணம், நேர்மை,

ii. வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்

iii. காட்சி அல்லது விசேட அனுபவம், அழைப்பும் பொறுப்புக் கொடுத்தலும், இறைவாக்கினர் விருப்பமின்மை, தைரியப்படுத்தல், அனுப்பப்படுதல்

iv. சவுல், தாவீது, சாலமோன், றெகெபோவாம், ஜேரோபோவாம்

v. புளியாத அப்பத்தைப் பயன்படுத்துதல், கசப்பான கீரையை உண்ணல், பாஸ்கா செம்மறியை உண்ணல், திராட்சை இரசம் அருந்துதல்

## பகுதி II

4. i. அரச, குருத்துவ, திருக்கூட்டமாக இறைவன் இஸ்ரயேல் மக்களை இறைமக்களாக்கிய விதம் பற்றி விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் இடவும்

ii. மாணவரின் விடைக்கேற்ப 10 புள்ளிகள் இடவும்.

5. i. முதலாம் மரபு
இம்மரபின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்களாக உலகம் படைக்கப்பட்டது.
இறைவன் ஆறு நாள் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். மனிதன் ஆறாம்நாளில் படைக்கப்பட்டான்.

இரண்டாம் மரபு
இம்மரபின் அடிப்படையில் மனிதன் முதலில் படைக்கப்பட்டு அவனுக்காக அனைத்தும் படைக்கப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது.
மனித படைப்பு வரலாறு விபரமாகத் தரப்பட்டுள்ளது.

ii. ஆதிப்பெற்றோரின் பாவம் தொடர்ந்து மனுக்குலத்தை பாதித்தது என்பதனை காயின் ஆபேல் சம்பவம், நோவா கால வெள்ளப்பெருக்கு, பாபேல் கோபுர கதை மூலம் விளக்கியிருப்பின்
10 புள்ளிகள் இடவும்

6. i. ஒசேயா 1: 2-8, 3:1 பகுதியிலிருந்து திருமண வாழ்வின் மூலம் இறைவனுக்கும் இஸ்ராயேல் மக்களுக்குமிடையேயுள்ள உறவை விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் இடவும்

ii. மாணவரின் விடைக்கேற்ப 10 புள்ளிகள்

7. i. கிரேக்கப்பேரரசை தோற்கடித்து உரோமைப்பேரரசு ஆட்சியைக் கைப்பற்றியதும் பலஸ்தீனா உரோமைப் பேரரசின் ஆட்சிக்குள் வருதல்
ஆளுநன் பிலாத்துவின் அதிகாரம்
சிற்றரசர்கள் நியமிக்கப்படல் போன்றன விபரிக்கப்பட்டிருப்பின் 10 புள்ளிகள்

ii. பலஸ்தீனாவின் பொருளாதாரம் வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டது.
அடிமை வியாபாரம் நிலவுதல்
இரண்டு வரிகள் சுமத்தப்படல் - ஆலயத்திற்கான வரி, உரோமைப் பேரரசுக்கான வரி
இவ்வரியினை உரோமையருக்கு செலுத்தல்
பொதுமக்கள் கடுமையான சுரண்டலுக்கு உள்ளாதல்

agaram.lk



Scanned with CamScanner